72

உ

ஸ்ரீசத்குருவேநம:

(சிவசித்தாந்தம்)

OFFICE OF THE REGISTRAR OF ... 13-OCT 1917 MADRAS

அருட்பால் ஸ்ரீசத்குருசதாசிவ திருநாம

# சங்கீர்த்தனம்.

## பரமானந்தலாபம்.

இஃது

திருவண்ணாமலையிலெழுந்தருளி இருக்கும்

ஸ்ரீ சத்குருஸ்வாமிகளால்

இயற்றப்பட்டு

திருவண்ணாமலைக்கடுத்த கானலப்பாடியிலிருக்கும்

கண்ணையரவர்களால்

வேலூர்

சுந்தரவிநாயகர் அச்சுக்கூடத்தில்

பதிக்கப்பட்டது.

—9—1917

Q23:417
N17
128902

உ

ஸ்ரீசத்குருவேநம:

(சிவசித்தாந்தம்)

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
3 - OCT 1917
MADRAS

அருட்பால் ஸ்ரீசத்குருசதாசிவ திருநாம

# சங்கீர்த்தனம்.

## பரமானந்தலாபம்.

இஃது

திருவண்ணாமலையிலெழுந்தருளி இருக்கும்

**ஸ்ரீ சத்குருஸ்வாமிகளால்**

இயற்றப்பட்டு

திருவண்ணாமலைக்கடுத்த கானலப்பாடியிலிருக்கும்

**கண்ணையரவர்களால்**

வேலூர்

சுந்தரவிநாயகர் அச்சுக்கூடத்தில்

பதிக்கப்பட்டது.

21—9—1917

264
181.48

178902

-600 008.

உ

ஸ்ரீ சத்குருவேநமஃ

சிவசித்தாந்தம்.

அருட்பால் சத்குருசதாசிவ

# திருநாம சங்கீர்த்தனம்.

## பரமானந்தலாபம்.

1 அந்தரங்கவாஸதேவ லக்ஷ்மிபூமிவல்லபா
அருள்நமசிவாய விஸ்வபார்வதீசநாயகா

2 நான்முகாதிவாணிதேவி நாரதாதிசத்குரோ
நவரசங்கள்நாடிஎங்கள் நாவில்வந்திருப்பாய்

3 பெந்தமோக்ஷபாவ பேதபெந்தமற்றதேசிகன்
அந்தரங்கமன்புருகி அருள்பெருகிபாடுவாய்

4 ஆதிஅஞ்சுபூதமாய நேகநாமரூபமாய்
சோதியாயரூபமாய் நிறைந்ததேசிவாயமே

5 அப்பனம்மையோடுகூடி தப்புசெய்தகாரியம்
செப்புவாயிதிந்ததேகமென்னமாயமீசனே

6 அஞ்செழுத்துமூன்றுலோக மப்பனம்மையாகுமே
அப்புமண்ணுமஞ்சுபூதம் தப்புசெய்ததாரடா

7 ஆதியஞ்சுபூதமாதி நாதவிந்துகளையிலே
சோதியாயதீதமாய் நிறைந்ததேசிவாயமே

8 நல்லவாளிணக்கமும் நல்லநாமகீர்த்தனம்
நல்லதிக்கலியுகே நமோநமசிவாயமே

9 நாதனெங்களுக்கதீதவிந்து நாதமுடிவிலே
ஜோதியஞ்செழுத்ததீத மானதேசிவாயமே

10 எட்டிரண்டுமாதியா எடுத்ததேகதேகிகள்
எட்டிரண்டுமறிகிலே னென்னமாயமீசனே

11 அஞ்சுபஞ்சபூதமாய நேகநேகஜீவராய்
நெஞ்சிலன்புகொண்டருள் நமோநமசிவாயமே

12 வாதபித்தசேஷ்மமோடு கூடிநின்றகுடிலையில்
நாடிநின்றபிராணவாயு நானுநீருமல்லயே

13 ஓடியோடிஎங்குமாயலையு மெங்கள்மானசம்
கூடிருந்துபாரும்வேளைநானுநீறுமல்லயே

14 மூலநாடிமூலமாய் முளைத்தநாடிமூன்றுமாய்
மாலுமயனுமரனுமாய் நானரிந்ததில்லையே

15 புத்திமோசமானதே பிறப்பிறப்புகாரணம்
புத்திவந்துஞாயமாகிலில்லை இல்லைஇல்லையே

16 பத்திவந்துமுற்றுமாகில் முத்திநாலுமடையலாம்
சித்தசுத்தியாவதுஞ் சதாசிவாசிவாயமே

17 ஸ்வாமிசேவைசெய்து நாமகீர்த்தனங்கள்சொல்கி
ஸ்வாமிவந்தருளுமே சதாசிவாசிவாயமே [லோ

18 பொய்யிறந்துமெய்யுணர்ந்து நாலுநாமமோதினல்
அய்யமில்லைதுய்யனே சதாசிவாசிவாயமே

19 கண்ணிறந்துகாதிறந்து கவலைவிட்டுமானசம்
எண்ணிறந்தஜோதியே சதாசிவாசிவாயமே

20 நாக்கிறந்துமூக்கிறந்து வாக்குபாதபாணியும்
ஊக்கமோடுபஸ்தமு மிறந்ததேசிவாயமே

21 அந்தமானகரணமற்ற கந்தையற்றுசின்மயம்
நிர்மலஸ்வ்யம் பரமஜோதியேசிவாயமே

22 அந்தரங்கபக்திகொண்ட கந்தைவிட்டகமலர்
அன்புகொண்டறிந்ததே சதாசிவாசிவாயமே

23 காமலோபமோகமற்று கபடமற்றயோகிகை
கருணையோடுகண்டதே சதாசிவாசிவாயமே

24 ராமநாமகீர்த்தனம் சர்வநாமகீர்த்தனம்
சர்வதாமனோகரஞ் சதாசிவாசிவாயமே

25 சத்ராமகீர்த்தனம் சித்ராமகீர்த்தனம்
முத்திராமகீர்த்தனம் சதாசிவாசிவாயமே

26 சுத்தராமகீர்த்தனம் சுலபமானகீர்த்தனம்
பக்திராமகீர்த்தனம் பராபராசிவாயமே

27 சர்வராமகீர்த்தனஞ் சராசராத்மகீர்த்தனம்
சர்வதாமனோகரஞ் சதாசிவாசிவாயமே

28 அந்தராமகீர்த்தன மனந்தராமகீர்த்தனம்
சிந்தைராமகீர்த்தனம் சிவாசதாசிவாயமே

29 ஆதிராமகீர்த்தன மனுதிராமகீர்த்தனம்
ஜோதிராமகீர்த்தனம் சதாசிவாசிவாயமே

30 சாந்தராமகீர்த்தனம் சமானமானகீர்த்தனம்
சமாதியோகசாதனம் சதாசிவாசிவாயமே

31 ஆசைராமகீர்த்தன மனுசைராமகீர்த்தனம்
பூசைராமகீர்த்தனம் புகழ்வதேசிவாயமே

32 ராமநாமமந்திரம் மிராமயாமிதந்திரம்
நானறிந்ததில்லையே சதாசிவாசிவாயமே

33 சாந்தலிங்கதன்பரம் சர்வலிங்கமென்பரம்
சாந்தமானசம்பஜே சதாசிவாசிவாயமே

34 ராமலிங்கமம்பரம் ரெமாபதேசிதம்பரம்
ராமராமநாமமே சதாசிவாசிவாயமே

35 நல்லடக்கமானசம் நன்றுசத்தியதர்மமும்
நல்லவாளிணக்கமும் நமோநமசிவாயமே

36 தொல்லைஇல்லைநல்லதே நமசிவாயமந்திரம்
சொல்லுசொல்லகந்தைபோம் சதாசிவாசிவாயமே

37 விஸ்வரங்கநாதனே விபோஜகஸ்சொரூபனே
விஸ்வசாக்ஷிபூரண சதாசிவாசிவாயமே

38 விஸ்வரூபபசுபதே நிச்சலாத்மஸ்ரீபதே
சாஸ்வதாயதாயகா சதாசிவாசிவாயமே

39 சைவசமயமாவதே சமாதிநானுசாதனம்
சர்வசமயசம்மதம் சதாசிவாசிவாயமே

40 பழவினைக்கருவிகள ருத்துநான்குசாதனம்
பழகிவருவதருமையே சதாசிவாசிவாயமே [வரை

41 பொருளிலாசைபெருகி என்பொருள்கவர்ந்தகள்
கருதிநல்விவேகமோடு கண்டதேசிவாயமே

42 பொருளறிந்துபெரியபொருளி லமிதமானபக்தி
டகமலர்தெரிந்ததே சதாசிவாசிவாயமே [கொண்

43 சத்திலேமனமிறந்து சித்திலேசிவமிருந்து
சுத்தமாயறிந்ததே சதாசிவாசிவாயமே

44 மோகமானவாரியில் மூழ்கிமோசம்போகுதே
ஆசையானபாசமே எமன்சதாசிவாயமே

45 ஆசையானவலையிலெ மமதைகொண்டுமோனசம்
மோசமாயலையுதே சதாசிவாசிவாயமே

46 அய்யனைமரந்துவிட்டு பொய்யனுமவன்திருடன்
மெய்யனையறிந்தவாள் சதாசிவாசிவாயமே

47 பராபரத்திலயிக்யமும் பரோபகாரசிந்தையும்
பார்த்துபாதுகார்ப்பவர் சதாசிவாசிவாயமே

48 பாவனைக்கதீதமாம் பரமயோகநிட்டையில்
பார்த்துபாதுகார்ப்பவர் சதாசிவாசிவாயமே

49 சாதுவையறிந்தவாள் சமாதியாம்பராபரம்
சோதியேசுகாமியே சதாசிவாசிவாயமே

50 ஆதிபூதநாதவிந்து அருளிருந்தநிலையிலே
சோதியம்பரத்ததீத மானதேசிவாயமே

51 அஞ்செழுத்துமாறெழுத்துமௌவுமுவ்வுமௌவுமாய்
அஞ்செழுத்துநெஞ்சிலே யறிந்ததேசிவாயமே

52 அஞ்செழுத்துபஞ்சபாப ரூபமானகாயமாம்
துஞ்செழுத்தைநெஞ்சிலே நினைந்ததேசிவாயமே

53 ஆசைமூன்றுபாசமான மோசமாயகட்டடா
நாசமானகாயமேது மறிவதில்லைஇல்லையே

54 பஞ்சகோசபாசமான சஞ்சிதங்கள்நெஞ்சிலே
சஞ்சலங்கள்நீக்கிநின்ற நிலையிலேசிவாயமே

55 அஞ்சுமாரகந்தைவிட்டு சித்தசுத்திநிஷ்களம்
தஞ்சுமாறரிந்ததே சதாசிவாசிவாயமே

56 அஞ்செழுத்திலோறெழுத்தை நெஞ்செழுத்தில்நேச
தஞ்சுமாறறிந்ததே சதாசிவாசிவாயமே [மாய்

57 ஊனெடுத்துமானமாய் மனவிமக்கள்தானமாய்
தானிருந்தமாயமாரு மறிவதில்லைஇல்லையே

58 மூவெழுத்துமூலமான மேலெழுத்துநடுவிலே
ஓவெழுத்துநாவிலே நமோநமசிவாயமே

59 மௌனமாஇருந்தபூனை எலிபிடித்ததன்மைபோல்
கவனமாஇருந்து நீயரிந்துகொள்ளவல்லீரே

60 சூக்ஷ்மவிந்துநீயதாய் ஸ்தூலவிந்துநானதாய்
ஸ்தூலசூக்ஷ்மகாரண மரிந்ததேசிவாயமே

61 சிவாயமஞ்செழுத்தினா லபாயமன்றிமானசம்
உபாயமாயறிந்ததே சதாசிவாசிவாயமே

62 நமச்சிவாயமந்திரம் நாவில்நல்லதந்திரம்
நானறிந்ததில்லையே சதாசிவாசிவாயமே

63 நாமமஞ்செழுத்தையும் நாவுமென்றமானசம்
நானறிந்ததில்லையே சதாசிவாசிவாயமே

64 நல்லவாளிணக்கமும் நேசமானபூசையும்
நல்லநாமகீர்த்தனம் நமோநமசிவாயமே

65 அண்டபிண்டகண்டமா யகண்டமாயரூபமாய்
தொண்டர்கண்டகண்டமே சதாசிவாசிவாயமே

66 அஞ்செழுத்தையாதியா யஞ்சுமூன் றுமெட்டதாய்
நெஞ்செழுத்தைநீதியா யறிந்ததேசிவாயமே

67 பரவெளிக்ககம்புரம் மேலுங்கீழுமப்புறம்
பெருவெளிப்ரகாசமாய் நிறைந்ததேசிவாயமே

68 அஞ்செழுத்தரிஹரன் நான்முகாதிதேவர்கள்
அஞ்செழுத்ததீதமாம் சதாசிவாசிவாயமே

69 கைலைஎன்ற மலையிலே மனமிருந்த நிலையிலே
நானறிந்ததில்லையே சதாசிவாசிவாயமே

70 மனமிறந்த நிலையிலே நீ இருந்தகலையிலே
நானறிந்ததில்லையே சதாசிவாசிவாயமே

71 நல்லதானதந்திரம் நமச்சிவாயமந்திரம்
சொல்லடா சுகம்வரும் சதாசிவாசிவாயமே

72 சுத்தமானமந்திரம் சுலபமானதந்திரம்
சொல்லடா சுகம்வரும் சதாசிவாசிவாயமே

73 ஸ்தூலமான தந்திரம் சூக்ஷமான மந்திரம்
ஸ்தூலமாயறிந்ததே சதாசிவாசிவாயமே

74 ஆதியான தந்திர மனாதியானமந்திரம்
ஓதடா சுகம்வரும் சதாசிவாசிவாயமே

75 தேகமான தேதடா தேகியாவ தேதடா
தேகதேகிரண்டுமாயறிந்த தேசிவாயமே

76 மாயையுடைய யோனியில் பிறந்தஜீவ னேதடா
மாயையும் மலடி என்றறிந்த தேசிவாயமே

77 இந்தனத்திலக்கி போலிருக்கு மிந்தஜீவனை
அந்தரங்கபக்திகொண்டறிவ தேசிவாயமே

78 மனக்கலக்கமற்று காமலோப மோகமற்றுநீ
யிணக்கமுற்றிருப்பதே சதாசிவாசிவாயமே

79 அணுவகண்டமான பேதமாவ தேதுமாயையால்
அணுவகண்டமானதுஞ் சதாசிவாசிவாயமே

80 அப்புமுப்பு மொப்பமாய் கலந்துபாருமளவிலே
அப்புமுப்புமேகமாஞ் சதாசிவாசிவாயமே

81 நாழிஉப்பு நாழிநீர் மெய்கலர்ந்துபாரடா
ஆழிவிண்ணகந்தையும கண்டமாஞ்சிவாயமே

82 சத்தியும் சிவனுமாய் விளங்குகின்ற பூரணம்
சித்தமேது மரிகிலேனென்ன மாயமீசனே

83 வானிலந்தரங்கமாயனந்த கோடிபூதமாய்
வானிதேகபூரணம் சதாசிவாசிவாயமே

84 பூரணம் புராணமாய் விளங்குகின்ற ஜோதியே
நாரணாதி ஜீவர்கள் சதாசிவாசிவாயமே

85 பூரணசுபாபமாம் சொரூபமென்றறிந்தபின்
பூரணப்பிரகாசமாய் விளங்குமே சிவாயமே

86 ஒவில் நாலுபூதமும் கலந்திருந்த போதிலும்
ஒவினேதுமில்லை பெந்தமென்ப தேசிவாயமே

87 ஆதிபூதமாதியாயனேக நாயரூபமாய்
ஜோதியோடுபெந்தமில்லை என்பதேசிவாயமே

88 பூரணத்திலல்பமுங் குறைவுகண்டமானசம்
பூரணத்திடம்வரா சதாசிவாசிவாயமே

89 பூரணத்தினப்புரம் பிறந்தமாயையேதடா
காரணத்தை உற்றுபார்க்கபடமாஞ்சிவாயமே

90 நாடகத்தையாடுகின்ற தோட்டிவேடமென்றபோல்
கூடெடுத்தநாடகம் நமோநமசிவாயமே

91 பூரணங்குடத்திலும் குளத்திலும்நிறைந்தபோல்
காரணம்ஜகத்திலும் பரத்திலும்சிவாயமே

92 பூரணத்திலணுவகண்ட மானபேதமேதடா
காரணத்தைஉற்றுபார் கவலைதீருமென்பதே

93 எண்ணை தாரைபோலவே இடைவிடர்தபூரணம்
எங்குமாய்விளங்கிநின்ற ஜோதியேசிவாயமே

94 பூரணப்பிரகாசமாய் விளங்குமிந்தஉலகமும்
பூரணப்பிரகாசமே சதாசிவாசிவாயமே

95 பூரணக்தைவிட்டு வேருலக மென்பதாணவம்
ஆணவத்தை விட்டுபார் கவலைதீருமென்பதே

96 அஞ்சுபஞ்ச பூகமஞ்சு மாத்திரைகள் சூத்திரம்
நெஞ்சிலே நினைந்ததே சதாசிவாசிவாயமே

97 அஞ்சுமில்லை யாருமில்லை நெஞ்சுணர்ந்துபாரடா
அஞ்சுமஞ்சும் வஞ்சகமறிவதேசிவாயமே

98 நாலுஜாதி நாலுவேதமாறு சாஸ்திரங்களும்
கூறுகின்ற நிலையிலே நிறைந்ததேசிவாயமே

99 காற்றினால் பறக்குகின்ற பூச்சிபோல் மனுஷரும்
சொற்றினால் பிறந்திறந்து சாகுதேசிவாயமே

100 எண்ணை தாரைபோல எங்குமிடைவிடாதபூரணம்
கண்ணுயிர்க்குருகருணையே சதாசிவாசிவாயமே

101 அரூபமான வெளியிலே சொரூபமானவொளியதை
சுபாவமாயறிந்ததே சதாசிவாசிவாயமே

102 ஏழுகோடி மந்திரம் நூறுகோடி தந்திரம்
பாழடாபராபரம் பாரதை சிவாயமே

103 ஞானபுத்திகொண்டு நீகருத்திருத்திமானசம்
மௌனமா இருப்பதே மனோகரஞ் சிவாயமே

104 கானகத்திலப்புமக்கனவு கண்டவஸ்த்துவும்
மனமுணர்ந்து பாருமளவிலில்லை இல்லை இல்லையே

105 முப்பிரப்பில்பண்ணிவைத்த புண்ணியபாபவினைகளை
இப்பிரப்புவந்ததர்க்கு காரணஞ் சிவாயமே

106 இப்பிரப்பில் செய்துவிட்ட குறைகளினிமேலினும்
பிறப்பிறப்புக்காரணஞ் சதாகிவாசிவாயமே

107 இப்பிறப்பில் தப்பினாலினிப்பிறப்புமேலிலும்
எப்பிறப்புவாய்க்குமோயானறிந்ததில்லையே

108 செத்து செத்தழுவதுஞ்சலனமற்றிருப்பதும்
அசுத்த சுத்தமாயையாஞ் சதாசிவாசிவாயமே

109 ஜீவ ஜீவனெங்குமாய் விளங்குகின்ற ஜோதியை
ஜீவனு இருந்ததுஞ் சதாசிவாசிவாயமே

110 மூலவிந்து மூலமாய் முளைத்த மூன்று முளையிதை
மூன்று கட்டருக்கிலோபிரப்பருஞ்சிவாயமே

111 முக்கடங்கள் தீர்த்துமூன் றுலகமுங் கடந்துபோய்
அக்கடற்கு மக்கரைகடந்ததுஞ்சிவாயமே

112 நாக்கினுல் கலங்குகின்ற மான்சம்மயக்கமாய்
வாக்கினுல் பிரப்பமெதென் றரிவதேசிவாயமே

113 தேகமோநமக்கு சொந்த மோகமேது மறிகிலேன்
போகமேநமக்கு பெந்தமாவதுஞ்சிவாயமே

114 பத்துமாதமம்மையின் வயற்றினுள்ளிருந்ததும்
சித்தமேது மரிகிலேன் சதாசிவாசிவாயமே

115 சுத்தமான தேதடா அசுத்தமான தேதடா
சுத்தமு மசுத்தமு மனக்கலக்கமாகுமே

116 செத்துபோன சமயநீ சுத்தமா இருக்குமா
சித்தமேதுமறிகிலேன் சதாசிவாசிவாயமே

117 சூட்சமவிந்து சுக்லம்ஸதூலவிந்து ரெத்தமும்
சுத்தமாவதேதடா சதாசிவாசிவாயமே

118 தோலெலும்பிரத்தமுமாமிசமும் மலங்களும்
சுத்தமாவ தேதடா சதாசிவாசிவாயமே

119 செத்துபோன நாள்முதல் சடங்குசெய்துமேலினும
சுத்தமாவ தேதடா சதாசிவாசிவாயமே

120 வாயினுள்ளிலெச்சிலும் வயற்றினுள் மலசலம்
சுத்தமாவ தேதடா சதாசிவாசிவாயமே

121 மூக்கினுங்கபஞ்சளிநாக்குபல்லினும் மலம்
சுத்தமாவ தேதடா சதாசிவாசிவாயமே

122 நாறுமுடலை நம்பினுலு ஜாதியுமயங்குதே
நானீதென்ற கந்தையாவதென்னமாய மீசனே

123 துர்க்குணங்கள் நீக்கிநல்ல நிற்குணம் பஜிக்கிலோ
ஜாதி நல்லஜாதி என்று நான் மரைகள்சாற்றுதே

124 ஆசையான பாசமே காலபாசமாகுமே
ஆசையற்றிருப்பதே சதாசிவாசிவாயமே

125 அண்ட கண்டமண்டலமருட்பிரகாசமண்டலம்
தொண்டர் கண்டமண்டலம் மனோகரஞ் சிவாயமே

126 அகண்ட கண்டமண்டலமரூபமானமண்டலம்
சொரூபமாயறிவதே சதாசிவாசிவாயமே

127 ஞானமா இருந்தறிவில் நாலுதீபமேகமாய்
ஜோதியாய் விளங்கி நின்ற ஜீவனே சிவாயமே

128 சித்தமோரெழுத்திலே சிறந்த பக்திமுத்தினல்
சுத்தமாய் மனந்தெளிந்தருளுமே சிவாயமே

129 சத்திபாதமூலமே சரணயுகளமம்மணீ
முத்திமூலமாவதுஞ் சதாசிவாசிவாயமே

130 நாளை நாளை என்று மெண்ணி நாளும்போன நாளிதே
நாளுவந்தடுத்த தேதும் நானறிந்ததில்லையே

131 காலமென்பதெண்ணி எண்ணிகவலைவந்துபோகுதே
காலனேலை வந்தவேளை நானறிந்ததில்லையே

132 உலகுசபட நாடகம் நாநீதென்ற நாடகம்
விகடமென்ற வாசலும் பலருமுண்டு காவலும்

133 பதமறிந்த ஞானிகள் பலருமுண்டு ஞாயவும்
மதமொழிந்தமானசம் நமோ நமசிவாயமே

134 அந்தரங்க பக்திகொண்டு சாதுபாத பூசைசெய்து
சிந்தையற்ற சிந்தையே சதாசிவாசிவாயமே

135 அன்பினலரும்பெடுத்தவர் பதத்திலர்ப்பணம்
இன்பமாம் நமோநமசிவா சிவாசிவாயமே

136 அஞ்சுபூதசஞ்சயம் தேகமானதம்பலம்
ஆறுசுவாமி அந்தரங்கவாசியாஞ் சிவாயமே

137 ஆதியான அம்பலம் அனதியான தந்திரம்
நானறிந்ததில்லையே சதாசிவாசிவாயமே

138 ஜோதியானதீபமும் நீதியானதூபமும்
சிந்தையாம்சுகந்தமுஞ் சதாசிவாசிவாயமே

139 ஆத்ரமானபக்குவமு மமிர்தமாம்நிவேத்தியமும்
சாந்தமானபுஷ்பமுஞ் சதாசிவாசிவாயமே

140 ஆறுகோயிலாறுசுவாமி ஆறுகாலபூசையும்
கூருவாய்குணலயே மனோகரஞ்சிவாயமே

141 சுழிமுனைக்கதீதமா யமிர்தவிந்துநாதமாய்
அழிவிறந்தஜோதியே சதாசிவாசிவாயமே

142 ஆசையற்றுபாசமற்று கோசமற்றுநேசமாய்
பூசையுற்றிருப்பதே சதாசிவாசிவாயமே

143 சங்கையற்றுசலனமற்று சருணசேவைசெய்கிலோ
சம்மதிக்குமீஸ்வரன் சதாசிவாசிவாயமே

144 அந்தரங்கசாந்தமா யகந்தைவிட்டுநிஷ்களம்
சிந்தைரங்கநாதரே சதாசிவாசிவாயமே

145 ஞானவாசலைத்துரந்து பாருமன்பிலம்பலம்
ஊனமற்றிருப்பதே சதாசிவாசிவாயமே

146 ஆசையானபூவதை நிராசையாயெடுத்துநீ
பூசைசெய்கிலாசையும் நிராசையாஞ்சிவாயமே

147 கங்குபகலுபங்கமற்று மண்டலங்கள்மூன்றுமாய்
தங்கமானஜோதியே சதாசிவாசிவாயமே

148 அருள்வெளிக்ககம்புற மங்குமிங்குமேகமாய்
பொருள்வெளிப்ரகாசமாயறிந்ததேசிவாயமே

149 மாயமானதாயடா மயக்கமாந்தகப்பனும்
ஞேயமாயறிந்ததே சதாசிவாசிவாயமே

150 மாயமானகாயமேக நாளழிந்துபோகுமே
ஞேயமாயறிந்ததே சதாசிவாசிவாயமே

151 காயமாவதேதடா கர்மவினைகளாகுமே
காமமற்றிருப்பதே சதாசிவாசிவாயமே

152 கோரமானபாதகங்கள் கோடிகோடிசெய்கினும்
கூறுவாய்சதாசிவா சிவாசிவாசிவாயமே

153 சர்வபாபமோசனம் சர்வலோகபாவனம்
சர்வதாமனோகரஞ் சதாசிவாசிவாயமே

154 சத்குருதன்பதமலரில் நிருத்திமெல்லமானசம்
நித்தியமும்துதிப்பவர் சதாசிவாசிவாயமே

155 தர்மபர்த்தகாமமாதி பக்திசித்திமுத்தியும்
சித்தமாஞ்சதா சிவாசிவாசிவாசிவாயமே

156 குருப்ரசாதசித்தமாய் குணங்கள்மூன்றதீதமாய்
அருள்ப்ரகாசசுத்தமா யறிந்ததேசிவாயமே

157 பூதனந்தநாதனைய் புகழனந்தசயனனைய்
ஆதியந்தமற்றதாஞ் சதாசிவாசிவாயமே

158 பூரணேபுராதனே பூதநாதஜோதியே
நாரணேநகாரனே சதாசிவாசிவாயமே

159 சாமளம்மனோகரங் கோமளாங்கமீஸ்வரம்
சாமிஎங்கள்நாதனே சதாசிவாசிவாயமே

160 ஆத்மயோகமாகயால் விதேகதேகிகைவரும்
ஆத்மனேபராத்மனே சதாசிவாசிவாயமே

161 ஆதியந்தமற்றதா யகண்டபரமஜோதியாய்
வீதியேவிதானமே சதாசிவாசிவாயமே

162 மூலமாயஜாலமான மூன்றுலோககாயமாய்
மாலயாதிரூபமாய் மனோகரஞ்சிவாயமே

163 எள்ளிலுள்ளிலெண்ணெபோல் நிறைந்திருந்தஜோதி
கள்ளமற்றயுள்ளிலே கலந்ததேசிவாயமே [யை

164 கனவுகண்டமனவிமக்கள் நினைவுமந்தபொருளுமே
மனமுணர்ந்துபாருமளவி லில்லை இல்லை இல்லையே

165 சர்வலோகமங்களம் சர்வதாமனோகரம்
சர்வசாக்ஷிபூரணம் சதாசிவாசிவாயமே

166 சூழவிண்ணிருக்கவே ஆழிவிண்ணைகொண்டபோல்
பாழிதென்றதேகமோ கமென்னமாயமீசனே

167 பிரகிருதியின்குணங்களால் கலங்கிநின்றமானசம்
விகுர்தியென்றரிவதுஞ் சதாசிவாசிவாயமே

168 ஆனந்தபூரணம் அருணகோடிபூரணம்
கருணைபோடுகண்டதே சதாசிவாசிவாயமே

169 காலசத்திகொண்டுமூல மாயமேதுமறிகிலேன்
பாலசத்திபாதமே சதாசிவாசிவாயமே

170 சத்துசித்தமாய்விளங்கும் நித்தியநிஷ்களங்கமாம்
சித்தசுத்ததத்வமே சதாசிவாசிவாயமே

171 மாதர்போகமோகமாய் மனக்குரங்கினின்பமாய்
சூதுகபடநாடகங்கள் நாடுதேசிவாயமே

172 தேகமோநமக்குசொந்தம்தேகியோநமக்குசொந்தம்
தேகமல்லதேகியென் றரிந்ததேசிவாயமே

173 சுத்தபரமஜோதியே சுகானந்தவாரியே
அத்துவிதவத்துவே சதாசிவாசிவாயமே

174 கார்யகாரணத்துளே கலந்திருந்தஜோதியை
பூரபூரணத்துளே நிறைந்ததேசிவாயமே

175 சாந்தமாங்கருத்திலும் சரணமம்பரத்திலும்
கருணைவந்துதிக்குமே சதாசிவாசிவாயமே

176 சுத்தநிற்மலச்சுயஞ் சோதியாயரூபமாய்
சித்தமேதுமறிகிலேன் சதாசிவாசிவாயமே

177 அகாதமானமாய்கையில் கலந்திருந்தஜோதியை
விகாதமாயிருந்ததுஞ் சதாசிவாசிவாயமே [யால்

178 கண்ணிலுண்ணியா இருந்தகருணை என்பொருமை
கார்த்துகொள்ளுமீஸ்வரன் சதாசிவாசிவாயமே

179 ஆதியில்பிறந்தமாயை யஞ்செழுத்துமாகுமே
பூதியில்பிறந்ததே சதாசிவாசிவாயமே

180 தத்பரத்திலாடிநின்ற தத்வபோதமாயனே
சிற்பரப்ரகாசனே சதாசிவாசிவாயமே

181 அஞ்சுசத்திஅஞ்சுரூப மன்புலன்களாகுமே
நெஞ்சிலன்புகொண்டதே சதாசிவாசிவாயமே

182 மூலசத்திபாலசத்தி வல்லபைக்கதீதமாய்
மேலிருந்தசத்தியே சதாசிவாசிவாயமே

183 எண்ணுமஞ்சுபூதமான புண்யபாபதேகமும்
மண்ணிலேபிறந்திறந்த மாயமேசிவாயமே

184 எண்ணுமஞ்சுபூதமாயை எண்ணிறந்தகோடியாம்
எண்ணிஎண்ணியேழைநெஞ்ச மேங்குதேசிவாயமே

185 கண்ணிரண்டுநடுவிலே கருத்திருத்திமண்டலம்
மூன்றுமாய்விளங்கிநின்ற ஜோதியேசிவாயமே

186 கண்ணுயிர்க்கருத்திருத்தியெண்ணுமெங்கள்மானசம்
கருணையோடுகண்டதே சதாசிவாசிவாயமே

187 கர்மமானதேதடாகாமகர்மமாகுமே
கர்மவினைகள்விடுவதே மனோகரஞ்சிவாயமே

188 காமமென்றகள்வர்கள் கொள்ளைசெய்வதெந்தனம்
நாமறிந்ததில்லையே சதாசிவாசிவாயமே

189 காருபூண்டபூரணங் கலந்துநின்றஜோதியை
நீருபூத்தநெருப்புபோல் நிறைந்ததேசிவாயமே

190 நிலையறிந்துநிற்பவர்க்கு நிலையிதாறுமாறுமாம்
நிலையில்வந்துகாட்டுமே சதாசிவாசிவாயமே

191 மனமடக்கிமாயைநீக்கி அப்புரத்திலப்புரம்
நானறிந்ததில்லையே சதாசிவாசிவாயமே

192 கறந்தபாலில்வெண்ணைபோல் கலந்துநின்றஜோதி [யை
நிறந்தரம்விளங்கிநின்ற நிலையிலேசிவாயமே

193 மாயைகொண்டுலோகமே ழிரண்டுமண்டபிண்டமாய்
காயமானதாயமுஞ் சதாசிவாசிவாயமே

194 சின்மயங்தெளிந்தவற்கு ஜீவஜீவனாகுமே
சம்மயம்மனோகரஞ் சதாசிவாசிவாயமே

195 எண்ணுமஞ்சுபூதமா யேழிரண்டுலகமாய்
கண்ணும்விண்ணிரண்டுமாய் கலர்ந்ததேசிவாயமே

196 கண்ணுவிண்ணிரண்டிலுங் கலர்ந்திருந்தஜோதியை
கருணைவந்துகாட்டுமே சதாசிவாசிவாயமே

197 சிற்பரத்திலப்புரம் சிவமிருந்ததற்பரம்
முப்புரத்திலப்புரம் முகந்ததேசிவாயமே

198 வானில்நாலுபூதமா யநேகநேகரூபமாய்
ஏகமாயகண்டமாய ரூபமாஞ்சிவாயமே

199 சாதுபாதபூசனை சர்வபாபமோசனம்
சர்வலோகமங்களம் சர்வதாசிவாயமே

200 சாதுநாமகீர்த்தனம் சமாதியோகசாதனை
சர்வதாமனோகரஞ் சதாசிவாசிவாயமே

201 சாதுசங்கசங்கமும் சர்வசங்கசங்கமும்
சாதுநாமகீர்த்தனம் சதாசிவாசிவாயமே

202 நானுநீறுமொத்திருந்த சித்தமானநடுவிலே
சுத்தபரமஜோதியே சதாசிவாசிவாயமே

203 மாயைகொண்டுமாயைநீக்கி மரணமென்றதூக்கமும்
மானிடப்பிரப்பிறப் பறுப்பதேசிவாயமே

204 உள்ளதொன்றுமுள்ளதல்ல உள்ளதின்னுநாசமில்லை
உள்ளுணர்ந்துபாரடா சதாசிவாசிவாயமே

205. வானில்மயிலுகானல்நீரு கனவுகண்டபோகமும்
மனமுணர்ந்துகருதுமளவிலில்லை இல்லை இல்லையே

206 பீமலங்கள்மூத்திரம் நாருமிருந்தவுடலையும்
நாநீதென்றகந்தையு மறிந்ததேசிவாயமே

207 நீரிலேகுமழியும் நிழலுமிந்ததேகமும்
நிலையுமல்லநீரிதே சதாசிவாசிவாயமே

208 நீரிலெண்ணெ விட்டபோல் நீகலந்திருப்பதை
நானரிந்ததில்லையே சதாசிவாசிவாயமே

209 ஆதியந்தமற்றிடம் பூதமஞ்சு சுட்டிடம்
ஜோதிவந்துகாட்டுமே சதாசிவாசிவாயமே

210 அன்புலன்களற்றிடம் மும்மலங்களற்றிடம்
ஜோதிவந்துகாட்டுமே சதாசிவாசிவாயமே

211 அருள்பெருகிநின்றிடம் பொருளறிய தன்னிடம்
ஜோதிவந்துகாட்டுமே சதாசிவாசிவாயமே

212 மானகெர்வமதமடக்கி மாய்கையற்று நின்றிடம்
ஜோதிவந்துகாட்டுமே சதாசிவாசிவாயமே

213 பொரிகரணமற்றிடம் இருவினைகள் விட்டிடம்
ஜோதிவந்துகாட்டுமே சதாசிவாசிவாயமே

214 கரணமஞ்சுதருணமுங் குணங்கள் மூன்று மற்றிடம்
ஜோதிவந்துகாட்டுமே சதாசிவாசிவாயமே

215 காமலோபமோகமுங் குரோதமற்று நின்றிடம்
ஜோதிவந்துகாட்டுமே சதாசிவாசிவாயமே

216 மூன்றுநாடிமூன்றவஸ்தை மும்மலங்களற்றிடம்
ஜொதிவந்துகாட்டுமே சதாசிவாசிவாயமே

217 ஈஷணங்கள் மூன்றுமற்று தூஷணங்களற்றிடம்
ஜோதிவந்துகாட்டுமே சதாசிவாசிவாயமே

218 ஆதிமூன்றுமண்டலம் அவதிகண்டிடத்திலே
ஜோதிவந்துகாட்டுமே சதாசிவாசிவாயமே

219 தங்குமங்ககந்தெளிந்து கங்குபகலுமற்றிடம்
ஜோதிவந்துகாட்டுமே சதாசிவாசிவாயமே

220 ஆசையற்றுநேசமாய் நிலையில் நின்றமானஸம்
ஜோதிவந்துகாட்டுமே சதாசிவாசிவாயமே

221 அச்சமற்ற கந்தையற்றருள் பிரக்கிடத்திலே
ஜோதிவந்துகாட்டுமே சதாசிவாசிவாயமே

222 பற்றறுத்துபாசமற்று பகலிரவுமற்றிடம்
ஜோதிவந்துகாட்டுமே சதாசிவாசிவாயமே

223 நான்குசாதனங்கள் பெற்றநுளு பெற்றிருப்பிடம்
ஜோதிவந்துகாட்டுமே சதாசிவாசிவாயமே

224 பெண்ணினோடிணக்கமற்று பெரியயின்பமாமிடம்
ஜோதிவந்துகாட்டுமே சதாசிவாசிவாயமே

225 மண்ணினோடிணக்கமற்று மானமற்றிருப்பிடம்
ஜோதிவந்துகாட்டுமே சதாசிவாசிவாயமே

226 பொன்னினோடினக்கமற்று பொருமையோடிருப்பி
ஜோதிவந்துகாட்டுமே சதாசிவாசிவாயமே [டம்

227 நானெனதகந்தையற்று நாமரூபமற்றிடம்
ஜோதிவந்துகாட்டுமே சதாசிவாசிவாயமே

228 தானமானபேயருத்து தானகந்தைவிட்டிடில்
ஜோதிவந்துகாட்டுமே சதாசிவாசிவாயமே

229 நாலுவேதவாதமற்று ஜாதிபேதமற்றிடம்
ஜோதிவந்துகாட்டுமே சதாசிவாசிவாயமே

230 புண்ணியபாபமானமற்று மனமிறந்துவிட்டிடம்
ஜோதிவந்துகாட்டுமே சதாசிவாசிவாயமே

231 பூதலத்திலொருவறிந்த மாயைவிட்டரிந்திடம்
ஜோதிவந்துகாட்டுமே சதாசிவாசிவாயமே

232 அன்புகொண்டுதேசிகன்றனருள்பொருந்திமானஸம்
ஜோதிவந்துகாட்டுமே சதாசிவாசிவாயமே

233 துரியபெரியபொருளிலும் அரிவிருந்தநிலையிலும்
ஜோதிவந்துகாட்டுமே சதாசிவாசிவாயமே

234 பூதலத்தில்மாயமற்று கபடமற்றிருப்பிடம்
ஜோதிவந்துகாட்டுமே சதாசிவாசிவாயமே

235 காமற்றுகர்மமற்று கவலையற்றிருப்பிடம்
ஜோதிவந்துகாட்டுமே சதாசிவாசிவாயமே

236 சுத்தமானவெளியிலே சுபாவமானவெளியிலே
ஜோதிவந்துகாட்டுமே சதாசிவாசிவாயமே

178902



237 அந்தரங்கமடியிலேயருள்பிறந்தமுடிவிலே
ஜோதிவந்துகாட்டுமே சதாசிவாசிவாயமே

238 பூரணபூரிதனே பூதநாததீதனே
ஜோதிவந்துகாட்டுமே சதாசிவாசிவாயமே

239 ஆதியந்தநடுவிலே நாதவிந்துமுடிவிலே
ஜோதிவந்துகாட்டுமே சதாசிவாசிவாயமே

240 நானிறந்தமுடிவிலே நீயிருந்தபடியிலே
ஜோதிவந்துகாட்டுமே சதாசிவாசிவாயமே

241 நானகந்தைமுடிவிலே நீயகண்டவடிவிலே
ஜோதிவந்துகாட்டுமே சதாசிவாசிவாயமே

242 மூன்றவஸ்த்தைவிட்டு மூலதுரியபெரியபொருளிலே
ஜோதிவந்துகாட்டுமே சதாசிவாசிவாயமே

243 நித்யநிஷ்களங்கமாய் நிற்விகர்ப்பநிற்மலம்
ஜோதிவந்துகாட்டுமே சதாசிவாசிவாயமே

244 குருப்ரசாதசித்தமாய் குணங்கள்மூன்றதீதமாய்
ஜோதிவந்துகாட்டுமே சதாசிவாசிவாயமே

245 குருபதம்பணிந்துநின்று கூறுமெங்கள்மானஸம்
ஜோதிவந்துகாட்டுமே சதாசிவாசிவாயமே

246 நித்யமானகுருபதம் நிற்மலேனபூஜிதம்
ஜோதிவந்துகாட்டுமே சதாசிவாசிவாயமே

247 பூரணனுபூதியாய் நாதவிந்துமுடிவிலே
ஜோதிவந்துகாட்டுமே சதாசிவாசிவாயமே

248 ஆசையற்றநைசையாய் விசாலமாயிருப்பிடம்
ஜோதிவந்துகாட்டுமே சதாசிவாசிவாயமே

249 சிந்தையற்றிருப்பிடம் சிவாலயத்தினந்தரம்
ஜோதிவந்துகாட்டுமே சதாசிவாசிவாயமே

250 சாதுபாதபூசைசெய் திதைப்படிப்பவர்களும்
சாதுவாஞ்சதா சிவாசிவாசிவாசிவாயமே

251 பராபராபுராஹரா தயாபராசிவாயமே
சராசராகுருபரா சதாசிவாசிவாயமே

252 சதாசிவாசிவாசிவா சிவாசிவாசிவாயமே
சிவாசிவாசிவாசிவா சதாசிவாசிவாயமே

ஸ்ரீசத்குருவே நமசிவசித்தாந்த கீர்த்தனம் சம்பூர்ணம்.

